**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**
**D041 மொழி வரலாறு –2**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சொல்லெழுத்து முறை என்றால் என்ன?
2. உருபொலியன் சொல்லெழுத்து என்றால் என்ன?
3. தற்காலத்தில் பிறமொழிச்சொற்களில் இடம்பெறும் மகர மெய் எவ்வாறு அமையும்?
4. சொல்லுருபு என்றால் என்ன?
5. பெயரடை என்றால் என்ன?
6. பெயர்ச்சொல்லின் இலக்கணத்தை திரேக்ஸ் எவ்வாறு சுட்டுகிறார்?
7. மொழியியலார் குறிப்பிடும் பதிலிடுபெயர்கள் யாவை?
8. சொல்லுருபு பெரும்பாலும் எந்த வேற்றுமை உருபைத் தொடர்ந்து வரும்?
9. தெரிநிலை வினையெச்சத்தின் பணி என்ன?
10. சொல்லின் பணி என்ன?
11. சொல்லின் பொருட்தொடர் அமைப்பில் மாற்றம் எற்படுத்துமா?
12. சமூகக் கிளைமொழியின் இரு வழக்குகள் யாவை?
13. 'கழகம்' என்ற சொல் அடைந்த உயர்பொருட்பேறு என்ன?
14. தாழ் நடு உயிர் ஒலிகள் யாவை?
15. குட்ட நாட்டார் "தாய்" என்ற சொல்லை எவ்வாறு வழங்குவர்?

**பிரிவு – 2**

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. தற்காலத் தமிழியல்பு குறித்து எழுதுக?
2. தற்காலத் தமிழில் எழுத்தியல் மாற்றங்கள் பற்றிக் கூறுக?
3. தற்காலத் தமிழில் சொல்லியல் மாற்றங்கள் பற்றிக் கூறுக?
4. "கள்" என்னும் பன்மை விகுதி உருவான வரலாறு பற்றிக் குறிப்பிடுக?
5. துணைவினையின் பயன்பாடு பற்றிக் குறிப்பிடுக?
6. ஃபீல்டு கோட்பாட்டினைப் பற்றிக் குறிப்பிடுக?
7. சொற்களின் வேர்ப்பொருளும் மாற்றமும் பற்றிக் கூறுக?
8. ஒலிப்பு முறைப்பாகுபாடு பற்றிக் கூறுக.

**பிரிவு – 3**

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) தமிழ் எழுத்து வருகை வரலாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) வரலாற்று நோக்கில் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிக் கட்டுரை வரைக.

2. (அ) கால இடைநிலைகளின் வரலாற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பெயரடையின் வளர்ச்சி வரலாற்றை எழுதுக.

3. (அ) தொல்காப்பியம் முதல் தற்காலம் வரையிலான சொற்பொருள் மாற்றம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உடம்படுமெய் ஒலிகள் பற்றி விவரிக்க.

❋❋ ❋